Registered as a News Paper

பக்கங்கள் 04 விலை ரூபா 5-00

நல்லூர் இளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 04 ( 20 - 10 - 1992 ) செவ்வாய்க்கிழமை ஓசை 245

## பல்கலைக்கழக அனுமதி வழக்கு நாளை விசாரணை ஆரம்பம்

பல்கலைக்கழக அனுமதி முறைக்கு எதிராக நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்ட வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும்போது வழக்குத் தாக்கல்செய்த மாணவன் சார்பாக சட்டத்தரணி ராஜ குணசேகர ஆஜராவார் என்று கூறப்படுகிறது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சார்பாக எதிர்வரும் 30 ஆம் திகதி வழக்கறிஞர் ஒருவர் ஆஜராவார். இதன்பின்னர் இவ்வழக்குத் தொடர்பாக நீதிபதிகளின் இறுதித் தீர்ப்பு ஜனவரி மாதம் 13, 15 ஆகிய திகதிகளில் வெளிவரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்படி வழக்கு கடந்த 14-ம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

# உயிலங்குளத்தில் துணிகரத் தாக்குதல்

# 10 ராணுவத்தினர் பலி: பலர் படுகாயம்

## காவலரண்கள் அழிப்பு புலிகள் தரப்பில் சேதமில்லை

(மன்னார்)

மன்னார் மாவட்டம் உயிலங்குளம் பகுதியில் அமைந்திருந்த தொடர் இராணுவ காவலரண்கள் மீது நேற்று முன்தினம் இரவு 11.55 மணியளவில் விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்தினர். இத்தாக்குதலின் போது 10க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகினர் பலர் படுகாயமடைந்தனர். பெருமளவு ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

உயிலங்குளம் பகுதியில் உள்ள சூரியகட்டைக்கும் இலந்தைமோட்டைக்கும் இடையேயுள்ள தொடர் இராணுவ காவலரண்கள் மீதும் அவற்றை ஒட்டிய மூன்று வீடுகளில் நிலை கொண்டிருந்த 30 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீதும் இத் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

25 நிமிடநேர தாக்குதலின் பின் இக்காவலரண்களும், வீடுகளும் புலிகளிடம் முற்றாக வீழ்ச்சி அடைந்தன இக் காவலரண்களையும், வீடுகளையும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து இரண்டு எல்.எம்.ஜிக்கள் உட்படபெருமளவு ஆயுதங்களை கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் 10 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியதுடன் ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு எல்.எம். ஜிக்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| ★ பி.கே. எல். எம் ஜி | — 01 |
| ★ பி.கே எல். எம். ஜி மேலதிக சுடுகுழல் | — 01 |
| ★ பி. கே. லிங்குடன் ரவைகள் | — 585 |
| ★ ஏ.கே.எல்.எம் ஜி | — 01 |
| ★ ரம் மகசின் | — 01 |
| ★ ஏ கே.எல். எம் ஜி. லிங்குடன் ரவைகள் | — 350 |
| ★ ரி-81 மகசின் | — 01 |
| ★ ஜி 3 மகசின் | — 01 |
| ★ ரி-81 ரைபிள் கிறனைட் | — 01 |
| ★ ஜே ஆர். கைக்குண்டு | — 18 |
| ★ தொலைத் தொடர்புசாதனம் | — 01 |
| ★ பற்றி | — 02 |
| ★ 40 எம்.எம். ஷெல் | — 18 |
| ★ செயின் கிறனைட் | — 05 |
| ★ ஏ கே.எல் எம் ஜி கோல்சர் | — 01 |
| ★ தலைக்கவசம் | — 10 |
| ★ தண்ணீர்க் கான் | — 20 |
| ★ தண்ணீர்க் கான் கோல்சர் | — 19 |
| ★ இராணுவப் பட்டி | — 14 |
| ★ இராணுவ சப்பாத்து (சோடி | — 20 |
| ★ சிவில் சப்பாத்து (சோடி) | — 19 |

## மீட்பு நிதி சேகரிப்பு

தீவகம் மற்றும் காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து இன்று பிற்பகல் 2.15 மணி [illegible] 5.00 மணி

## நிவாரணமாக பழுதடைந்த பொருள்கள்

(வடமராட்சி)

பருத்தித்துறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்தோருக்கு பழுதடைந்த உலர் உணவுப் பொருள்களை நிவாரணமாக வழங்கி வருகிறது

சக்கோட்டைப் பகுதியில் உள்ள கிளையில் மயிலிட்டி பலாலியைச் சேர்ந்த 400 இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சீனிக்குப் பதிலாக வழங்கப்படும் கௌபி, உழுந்து, சடலைப்பருப்பு ஆகியவை பழுதடைந்து காணப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள்கள் புழுக்கூடுகள் கட்டியும், உழுத்தும்,பாவனைக்குதவாததாகக் காணப்படுவதோடு, சுகாதாரத் தீங்கை உண்டு பண்ணக் கூடியதாகவும் உள்ளது. இது சம்பந்தமாக இடம் பெயர்ந்தோர் செய்வதறியாத நிலையில் உள்ளனர்.

[82]

## அத்தியாவசிய பொருளுடன் இன்று குமண வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் 'குமண' கப்பல் இன்று பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கப்பலில் 1000 மெற்றிக் தொன் அரிசி, 750 மெற்றிக் தொன் சீனி, 2 மெற்றிக் தொன் தீப்பெட்டி, 50 மெற்றிக் தொன் மைசூர் பருப்பு, யாழ் போதனா வைத்திய சாலைக்கான மருந்து மற்றும் சிகிச்சைப் பொருள்கள் என்பனவும், பலநோக்குச் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சாம்பிறாணி, சக்கரை, உள்ளி போன்றபொருள்களும்எடுத்து வரப்படவுள்ளன. இதை விட பல தனியார் நிறுவனங்களுக்குரிய பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன. (பா,82)

குமண கப்பலில்

## குறிப்பிட்ட அளவு சீனி எடுத்துவரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

''குமண'' கப்பலில் முன்னர் குறிப்பிட்ட அளவைவிட குறைந்த அளவு சீனியே தற்பொழுது அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே 850 மெற்றிக் தொன் சீனி அனுப்பப்பட இருப்பதாக யாழ் அரச அதிபருக்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்திருந்தார்.

(3-ம் பக்கம் பார்க்க)

## ராணுவ தலைமை மாற்றத்தால் புலிகளை வென்றிட முடியாது

### சிங்கள விமர்சகர்கள் தெரிவிப்பு

உயிலங்குளம் பகுதியில் உள்ள சூரிய கட்டைக்கும் இலந்தை மோட்டைக்கும் இடையேயுள்ள தொடர் இராணுவ காவலரண்கள் மீதும் அவற்றை ஒட்டிய மூன்று வீடுகளில் நிலை கொண்டிருந்த 30 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் மீதும் இத் திடீர் தாக்குதல் நடத்தப்பட்டது.

25 நிமிடநேர தாக்குதலின் பின் இக்காவலரண்களும், வீடுகளும் புலிகளிடம் முற்றாக வீழ்ச்சி அடைந்தன இக்காவலரண்களையும், வீடுகளையும் கைப்பற்றிய விடுதலைப் புலிகள் அங்கிருந்து இரண்டு எல்.எம்.ஜிக்கள் உட்படபெருமளவு ஆயுதங்களை கைப்பற்றினர்.

இத்தாக்குதலில் 10 இற்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியாகியதுடன் ஏனையோர் காயங்களுடன் தப்பி ஓடிவிட்டனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் சேதம் ஏதுவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

மன்னார் உயிலங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விடுதலைப்புலிகள் நடாத்திய தாக்குதலில் இரண்டு எல்.எம். ஜிக்கள் உட்பட பெருமளவு ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| ★ | பி. கே. எல். எம் ஜி | — 01 |
| ★ | பி.கே எல். எம். ஜி மேலதிக சுடுகுழல் | — 01 |
| ★ | பி. கே. லிங்குடன் ரவைகள் | — 585 |
| ★ | ஏ.கே.எல்.எம் ஜி | — 01 |
| ★ | ரம் மகசின் | — 01 |
| ★ | ஏ கே.எல்.எம் ஜி. லிங்குடன் ரவைகள் | — 350 |
| ★ | 60 எம். எம். மோட்டார் | — 01 |
| ★ | 60 எம்.எம். ஷெல் | — 12 |
| ★ | ரி-56 - 2 ரக துப்பாக்கி | — 03 |
| ★ | ரி-56 - 1 ரக துப்பாக்கி | — 03 |
| ★ | ரி-56 புதிய ரக துப்பாக்கி | — 02 |
| ★ | ஜி 3 ஏ. 3 ரக துப்பாக்கி | — 01 |
| ★ | நடுத்தர ரவைகள் | — 8000 |
| ★ | ரி-56 மகசின் | — 47 |
| ★ | ரி-81 மகசின் | — 01 |
| ★ | ஜி 3 மகசின் | — 01 |
| ★ | ரி-81 ரைபிள் கிறனைட் | — 01 |
| ★ | ஜே ஆர். கைக்குண்டு | — 18 |
| ★ | தொலைத் தொடர்புசாதனம் | — 01 |
| ★ | பற்றி | — 02 |
| ★ | 40 எம்.எம். ஷெல் | — 18 |
| ★ | செயின் கிறனைட் | — 05 |
| ★ | ஏ கே.எல் எம் ஜி கோல்சர் | — 01 |
| ★ | தலைக்கவசம் | — 10 |
| ★ | தண்ணீர்க் கான் | — 20 |
| ★ | தண்ணீர்க் கான் கோல்சர் | — 19 |
| ★ | இராணுவப் பட்டி | — 14 |
| ★ | இராணுவ சப்பாத்து (சோடி | — 20 |
| ★ | சிவில் சப்பாத்து (சோடி) | — 19 |
| ★ | ஏ.கே கோல்சர் | — 20 |
| ★ | ஏ.கே. ஜக்கட் கோல்சர் | — 02 |
| ★ | ரி-81 பைனைட் | — 02 |
| ★ | கமரா | — 01 |
| ★ | இராணுவ சீருடை | — 42 |
| ★ | சாதரண தொப்பி | — 08 |
| ★ | தோள் பை | — 19 |
| ★ | மழை அங்கி | — 05 |

# வடபகுதி இராணுவத் தளபதியாக பிரிகேடியர் தளுவத்த நியமனம்

## மேலும் பலருக்கு பதவி உயர்வு

(கொழும்பு)

கடந்த இருவாரங்களுக்கும் மேலாக நீடித்த பல த சர்ச்சைக்குப் பின்னர், பிரிகேடியர் ஆர்.எஸ். தளுவத்த வடபிராந்திய இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார். அநுராதபுரத்தை தலைமையகமாகக்கொண்டியங்கும் சிறிலங்கா இராணுவத்தின் இரண்டாவது டிவிஷனின் தளபதியாக இவர் செயற்படுவார். இந்த நியமனம் வழங்கப்படுவதற்கு முன்பாக ஆர். எஸ். தளுவத்த குடாநாட்டிற்கான படைகளின் மேலதிகாரியாக பணியாற்றிவந்தார்.

இப் பதவிக்கு தற்போது கெமுனு குலதுங்க நியமிக்கப்பட்டுள்ளார். பிரிகேடியர் கெமுனு குலதுங்க இதற்கு முன்பாக ஆனையிறவுப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் ஏழாவது பிரிகேட் குறூப்பின் பொறுப்பதிகாரியாக செயற்பட்டவராவார்.

இவை தவிர எல். குலதுங்க, கே ஏ. ஞானவீர, டி. களுபஹான, எச். என். டபிள்யூ. டயஸ், ஆர். பி. லியனகே, எல். சி. ஆர். குணவர்த்தனா, ஜி. டபிள்யூ. டபிள்யூ பெரேரா ஆகியோர் கேணல் தரத்திலிருந்து பிரிகேடியர்களாகவும், எச். ஜி. என். பிரேமசிறி, என். ஆர் மாறம்பே, எம். டி. எஸ். சந்திரபாலா, என். மல்லவாராச்சி, டி எஸ்.விஜியசூரிய, டபிள்யூ. ஏ. டி. குணசேகரா ஆகியோர் லெப். கேணல் பதவிகளிலிருந்து கேணல்களாகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும் பதினொரு மேஜர் தரத்தைச் சேர்ந்த அதிகாரிகள் லெப். கேணல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர் எனினும் பிரிகேடியர் தளுவத்த மற்றும் குலதுங்க ஆகியோரும் பதவி உயர்த்தப்பட்டார்களா எனக் கேட்கப்பட்டதற்கு எதிர் மறையாகவே பதிலளிக்கப்பட்டது.

# வட - கிழக்கில் எல்லைக் காவற்படை 5,000 பேரை திரட்ட அரசு முடிவு

வடக்கு, கிழக்கு மாகாண எல்லையோரங்களில் இருக்கும் சிங்கள முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்க தனியான எல்லைப்படை அமைக்கப்படும் எனவும், இதற்கென ஐயாயிரம் பேர் திரட்டப்படவுள்ளனர் எனவும் கொழும்புப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இப் படை அமைக்கப்படுவதற்கு முன்னால் உடனடிப் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்டங்களிலும் இருக்கும் மேலதிக ஊர்காவல் படையினரை இவ் எல்லையோர கிராமங்களுக்கு அனுப்பிவைக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது. என்று மேலும் தெரியவருகிறது.

## மீட்பு நிதி சேகரிப்பு

தீவகம் மற்றும் காரைநகர், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய உதவி அரசாங்க அதிடர் பிரிவுகளைச் சேர்ந்தவர்களிடம் இருந்து இன்று பிற்பகல் 2.15 மணி தொடக்கம் 5.00 மணி வரை வண்ணார் பண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரியில் தமிழீழ மீட்புநிதி பெற்றுக் கொள்ளப்படும் என தமிழீழ விடுதலைப்புலிகள் நிதித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

## அரச அதிபர் கொழும்பு செல்வார்

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்கஅதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் மிக விரைவில் கொழும்பு செல்ல உள்ளார்.

இதற்கான போக்கு வரத்து குறித்த ஏற்பாடுகளை அரச அதிபர் மேற்கொண்டு வருகிறார். (க)

## குமணவில் தபால் பொதிகள்

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறையை வந்தடையுமென எதிர்பார்க்கப்படும் ''குமண'' கப்பலில் 423 வெளியூர்த் தபால் பொதிகள் எடுத்து வரப்படுகின்றன. (பா)

## காரைநகர் இராணுவம் எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலை ஆகிய பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை நடாத்தியுள்ளனர்.

நேற்றுக்காலையும் நேற்று முன்தினமும் மேற்படி பகுதிகளை நோக்கி தொடர்ச்சியான தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதன்போது பல எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. இதனால் இப் பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். (க)

கப்படும் கௌபி, உழுந்து, சடலைப்பருப்பு ஆகியவை பழுதடைந்து காணப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள்கள் புழுக்கூடுகள் கட்டியும், உழுத்தும், பாவனைக்குதவாததாகக் காணப்படுவதோடு, சுகாதாரத் தீங்கை உண்டு பண்ணக் கூடியதாகவும் உள்ளது. இது சம்பந்தமாக இடம் பெயர்ந்தோர் செய்வதறியாத நிலையில் உள்ளனர். [82]

குமண கப்பலில்

## குறிப்பிட்ட அளவு சீனி எடுத்துவரப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

''குமண'' கப்பலில் முன்னர் குறிப்பிட்ட அளவைவிட குறைந்த அளவு சீனியே தற்பொழுது அனுப்பிவைக்கப் பட்டுள்ளது.

ஏற்கனவே 850 மெற்றிக் தொன் சீனி அனுப்பப்பட இருப்பதாக யாழ் அரச அதிபருக்கு அத்தியாவசிய சேவைகள் நாயகம் அறிவித்திருந்தார்.

(3-ம் பக்கம் பார்க்க)

குரிய பொருள்களும் எடுத்து வரப்படுகின்றன. (பா, 82)

# ராணுவ தலைமை மாற்றத்தால் புலிகளை வென்றிட முடியாது

## சிங்கள விமர்சகர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளுக்கு எதிரான கஷ்டமான யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பாதுகாப்புப் படைகளின் தலைமை ஸ்தானத்திலும், கட்டளையிடும் அமைப்பிலும் ஜனாதிபதி பிரேமதாசா அண்மையில் மேற்கொண்ட மாற்றங்களினால் மாத்திரம் புலிகளுக்கு ஈடு கொடுத்து அவர்களைச் சமாளிக்க முடியாது இந்த மாற்றங்களினால் புலிகளை இராணுவ ரீதியாக அரசு வெல்லவும் முடியாது என்று அரசியல் மற்றும் இராணுவ ஆய்வாளர்கள் கொழும்பில் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவர்களின் கருத்துப்படி புலிகளைத் துரத்தி அடிக்கலாம் என்ற அரசின் தந்திரோபாயம் படுதோல்வியைத் தழுவிக் கொண்டுள்ளது. அம்பாறை, மட்டக்களப்பு, திருக்கோணமலை மாவட்டங்களில் அரச கட்டுப்பாடு மீளவும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# சிறிலங்கா இராணுவத்திற்கு கிழக்காசிய நாடு ஆயுத விநியோகம்

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவத்திற்கு தேவைப்படும் ஆயுதங்கள்மற்றும் ரவைகளைவழங்குவதற்குகிழக்குஆசியநாடுஒன்று முன்வந்துள்ளது. இதேவேளை முன்னாள்கம்யூனிஸ்ட்நாடொன்று யுத்த டாங்கிகள், பீரங்கி பொருத்தப்பட்ட உலங்கு வானூர்திகள், மற்றும் ஏவுகணை பொருத்தப்பட்ட படகுகள் கனரக வாகனங்கள் என்பவற்றை சிறிலங்காவிற்கு வழங்க முன்வந்ததை தொடர்ந்து தற்போது இதுவும்கிடைக்கவுள்ளது குறிப்பிடத்தக்கது. சிறிலங்கா அரசாங்கம் குறை

(4-ம் பக்கம் பார்க்க)

## பேராதனை பல்கலையில் தமிழ்மாணவர்மீது தாக்குதல்

(கண்டி)

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் பொறியியல்பீட தமிழ் மாணவர் மீது அதிகாலை வேளை இனம் தெரியாதோர் தாக்கியதாக புகாரிடப்பட்டுள்ளது

கடந்த சனிக்கிழமை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உள்ள அக்பர் மண்டபத்திற்குள் தாங்கள் தங்கியிருந்த

(4-ம் பக்கம் பார்க்க)

சமூகச்சீர்கேட்டு செயலில்

## ஈடுபட்ட ஒருவருக்கு புலிகள் மரணதண்டனை

சமூகச் சீர்கேட்டு நடவடிக்கையில் ஈடுபட்டமைக்காக முள்ளியவளை பொன்னகர் சந்தியில்வைத்து கடந்த வியாழன் அன்று ஒருவருச்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

ஜேக்கப் ஜோர்ச் (வயது 55, பொன்னகர், முள்ளியவளை தண்ணீரூற்று) என்பவருக்கே இவ்வாறு மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது.

கலை, பண்பாட்டை பேணிப் பாதுகாத்துபோராட்டம்நடத்

(4 ஆம் ப்க்கம் பார்க்க)

# மன்னார் புதிய ஆயர் இன்று திருநிலைப்படுத்தல்

மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக அருட்திரு இராயப்பு ஞானானந்தர் யோசவ் அடிகளார் இன்று பிற்பகல் 5.00 மணிக்கு மடுத்திருப்பதியில் திருநிலைப்படுத்தப் படவுள்ளார்.

புதிய ஆயரை திருநிலைப்படுத்தும் சடங்குகளுக்கு யாழ். ஆயராக புதிதாக நியமனம் பெற்றுள்ள பேரருள் திரு. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையேற்று நடாத்த உள்ளார் இவ்வைப

(4 ஆம் பக்கம் பார்க்க)

**கண்டல் மரங்களைக் காத்திடுவோம்**
**கடல் அரிப்பைத் தடுத்திடுவோம்**

## வரி விளம்பரம்


### மாணவருக்கான கையேடு

''பரீட்சைகளுக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர் கொள்ளலும்'' உளவியல் சஞ்சிகை தனிப் பிரதி - ரூபா 12.00 தேவையானோர் பதினைந்து ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி ஜோ. எக்கட்டன் 19/3 கொழும்புத்துறை வீதி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை- சுண்டிக்குளி சபாமிசிலும் பெற்றுக் கொள்ளலாம்.

(சி-5231)

### தையல் இயந்திரங்கள்

தீபாவளியை முன்னிட்டுச் சகலவிதமான தையல் இயந்திரங்களையும், உதிரிப்பாகங்களையும் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளவும், பழுதடைந்த சகலவிதமான தையல் இயந்திரங்களையும் உடனுக்குடன் எமது நிலையத்திலும், உங்கள் வீடுகளிலும் வைத்துத் திருத்திக் கொள்ளவும், உங்கள் தையல் இயந்திரங்களை விற்றுக் கொள்ளவும், நாடுங்கள். தையல் இயந்திர நிலையம் கண்டி வீதி, சாவகச்சேரி.

(சி-5232)

### மலிவு விற்பனை

தீபாவளித் திருநாளை முன்னிட்டு றெடிமேட் ஸ்கேட், பிளவுஸ் சிங்கப்பூர் கவுண்கள், சூட்டிங் சேட்டிங் வகைகள் இன்று தொடக்கம் 25-10-92 வரை மலிவு விலையில் கிடைக்கும், தவறவிடாதீர்கள். துர்க்கா ரெக்ஸ் 164, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம்.

(சி-5251)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்காவாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### ஜெயா அழகு சாதன மாளிகை

எவர் சில்வர், பிளாஸ்ரிக், தையல் உபகரணங்கள் பன்சி கூட்ஸ் பொருள்கள். மொத்த சில்லறை விற்பனை நிலையம். ஜெயா அழகு சாதன மாளிகை 177-A மின்சார நிலைய வீதி 160, நவீன சந்தை உட்புறம் யாழ்ப்பாணம். (சி-5250)


## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தினால் அதிபர் தரம் 1 இற்கானகருத்தரங்கு 20-10-92 முதல் 23-10-92 வரை நான்கு நாட்களுக்கு கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறவுள்ளது முதலாம்தர அதிபராகப்போட்டிப் பரீட்சை மூலம்புதிதாகதெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு சென்ற அதிபர்களும் இதுவரை முகாமைத்துவ பயிற்சி பெறாத முதலாம் தர அதிபர்களும் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு இரா. சுந்தரலிங்கம் அவர்கள் கேட்டுக்கொள்கின்றார். (42)

## ஓமந்தைப் பகுதியில் கிடுகிற்குத் தட்டுப்பாடு

(வவுனியா)

ஓமந்தைப் பகுதிகளில் குடிசைகள் வேய்வதற்கு கிடுகுகள் இல்லாமையால் கூரைகள் சேதமடைந்த வீடுகளில் வாழமுடியாது மககள் பெரும் கஷ்டமுறுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தாண்டிக்குள தடை முகாமில் கிடுகுகள் கொண்டு செல்வதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவதை அடுத்தே இப்பகுதிகளில் கிடுகளுககுத் தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் கிடுகுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள போதிலும் சில இடங்களில் ஒரு சோடி கிடுகு பத்து ரூபாய் ஆக விற்கப்படுகின்றது என்றும்,

பனை ஓலையால் குடிசை வேய்வதற்கு முற்பட்டாலும் ஒரு பனையில் ஓலை வெட்டுவதற்கு 25 ரூபாய் கூலி கொடுக்கவேண்டியுள்ளது என்றும் கூறப்படுகிறது.

## செயலகங்களின் நடத்தை பொருள் விநியோகம் பாதிப்பு

[வவுனியா]

வவுனியா, மன்னார் செயலகங்களினால் வவுனியா தமிழ்ப்பிரிவு கூட்டுறவுச் சமாஜத்திற்கு வழங்கப்பட வேண்டிய பல லட்சம் ரூபா பணம் வழங்கப்படாமல் தாமதமாகியிருப்பதனால் முத்திரைக்குரிய பொருள் விநியோகம் தடைப்பட்டுள்ளது.

உணவு முத்திரை, பாடசாலை மாணவர் முத்திரை ஆகியவற்றிற்குரிய பணம் வவுனியா, மன்னார் செயலகங்களினால் வழங்கப்படவில்லை,

வவுனியா செயலகத்தினால் சுமார் 55 இலட்சம் ரூபாவும். மன்னார் செயலகத்தினால் சுமார் 18 இலட்சம் ரூபாவும் வழங்கப்பட இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன

இதன் காரணமாக புதிய முத்திரைகளுக்குரிய பொருள்களை கொள்வனவு செய்து விநியோகம் செய்ய முடியாமல் வவுனியா தெற்கு தமிழ்ப் பிரிவு கூட்டுறவுச் சமாஜம் திண்டாடுகிறதுதி [தி]

## டிராக்டர்களுக்கு வெறும் பெட்டியோடு மட்டும் வடபகுதிவர அனுமதி

(வவுனியா)

வவுனியா நகரில் சுமார் இரு மாதங்கள் வரை தடுத்து வைக்கப்பட்டிருந்த டிராக்டர்கள் வெறும் பெட்டிகளுடன் வடபகுதி நோக்கிச் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளது.

வடபகுதியைச்சேர்ந்த இந்த டிராக்டர்கள் மூலம் தடை செய்யப்பட்ட பொருள்கள் மறைத்து ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கட்பட்டிருந்தன

தற்போது வெற்றுப்பெட்டிகளுடன் எதுவித பொருள்களும், ஏற்றிக் கொள்ளாமல் வடபகுதி நோக்கிச் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதே சமயம், தடை செய்யப் பட்ட பொருள்கள் ஏற்றிச் செல்ல முயற்சித்த பல டிராக்டர்கள் இராணுவத்தால் பறிமுதல் செய்யபபட்டுள்ளன. (தி)

## தாண்டிக்குளத்தில் புதிய சோதனை சாவடி

(வவுனியா)

தாண்டிக்குளம் விவசாயப் பாடசாலை பகுதியில் புதிய வாகன சோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் பொருள்களைக் கொள்வனவு செய்து ஏற்றிவரும் வாகனங்கள் இந்த சோதனை நிலையத்தில் வைத்துசோதனைசெய்யப்படுகிறது.

அனுராதபுரம், கொழும்பு பகுதிகளில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் வழமைபோலவே ஈரற்பெரியகுளம் சோதனை நிலையத்தில் வைத்து சோதனை செய்யப்படுகிறது. (தி)

## நாடு கடத்துவது பிரச்சினைக்கு தீர்வாகாது

(கண்டி)

தீர்க்க உதவும் மாறாக

### சிறிலங்கா சுதந்திரக்கட்சி

## பிக்கு அணி மீதான தடை நீக்கக்கோரி மறியல்

(கொழும்பு)

சுதந்திரகடசியின் பிக்கு அணியை கட்சி தலைவி திருமதி பண்டாரநாயக்க தடை செய்தமையைக் கண்டித்து அக்கட்சியை சேர்ந்த பிக்குமார்கள் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ரோட்மீஸ் பிளேஸ் வீட்டிற்கு முன்னால் மறியல் செய்ய இருப்பதாக லக்திப பத்திராதிபர் வினி எத்திகொட தெரிவித்தார்.

தமது அணியை தடை செய்தமை கட்சி விதி முறைக்கு முரணானது என்றும் அணியின் தடையை உடன் நீக்குமாறும் அவர்கள் வேண்டியுள்ளதாக மேலும் அவர் தெரிவித்தார்.


## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை பிறேம

(மரியதாசன் கோகுலவாசன்)

வீரப்பிறப்பு : 13 - 08 - 1965
வீரச்சாவு : 20 - 10 - 1988

வீரத்தின் விளைநிலமே
விடுதலையின் சுடரொளியே
உன் கால்தடங்கள் இருக்குமட்டும்
கவலையில்லை எங்களுக்கு
வழிகாட்ட அது போதும்
வரலாற்றை நாம் படைப்போம்

### மீசாலையில் நம்பிக்கைக்கு உகந்த வகையில்.....

- அரிசி குற்றல்
- மாவு அரைத்தல்
- அரிசி தீட்டல்
- தூள் திரித்தல்

எதுவானாலும் சிக்கனமாக தரமாக உடனுக்குடன் செய்துகொள்ள உடன் நாடுங்கள்.....

அரிசி தீட்டல்

தூள் திரித்தல்

எதுவானாலும் சிக்கனமாக தரமாக உடனுக்குடன் செய்துகொள்ள உடன் நாடுங்கள்.....

**வி - பி - என்**

**கிறைண்டிங் மில்**

பிரதான வீதி, மீசாலை.

(சி/5241)



கிளிநொச்சி நகரில்

தீபாவளி தினத்தை குதூகலமாகக் கொண்டாடிட

**மங்களத்தி புடைவை வியாபார நிலையம்**

வான வில்லின் வர்ண ஜாலம் — ஆம்
கண்கவர் வண்ணப் பட்டாடைகளின் களஞ்சியம்.

மங்களத்தி

★ ஆடவர்க்கேற்ற சேட்டிங் சூட்டிங் வகைகள்

★ நங்கையர்க் கேற்ப நவநாகரிக உடைகள்

★ சிறுவர் சிறுமியர்க்கேற்ப சிங்கார ஆடைகளுக்கு

கிளிநொச்சி நகரில் சிறந்த புடைவை வியாபார நிலையம்

**மங்களத்தி புடைவை வியாபார நிலையம்**

யாழ். வீதி, கிளிநொச்சி.

(சி-5244)


டிராக்டர்கள் மூலம் தடை செய்யப்பட்ட பொருள்கள் மறைத்து ஏற்றிச் செல்லப்படுகின்றன என்று சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருப்ப பட்ட பொருள்கள் ஏற்றிச் செல்ல முயற்சித்த பல டிராக்டர்கள் இராணுவத்தால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. (தி)

## தாண்டிக்குளத்தில் புதிய சோதனை சாவடி

(வவுனியா)

தாண்டிக்குளம் விவசாயப் பாடசாலை பகுதியில் புதிய வாகன சோதனை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நகரில் பொருள்களைக் கொள்வனவு செய்து ஏற்றிவரும் வாகனங்கள் இந்த சோதனை நிலையத்தில் வைத்துசோதனைசெய்யப்படுகிறது.

அனுராதபுரம், கொழும்பு பகுதிகளில் இருந்து பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் வழமைபோலவே ஈரற்பெரியகுளம் சோதனை நிலையத்தில் வைத்து சோதனை செய்யப்படுகிறது. (தி)

## நாடு கடத்துவது பிரச்சினைக்கு தீர்வாகாது

(கண்டி)

''இந்திய கடவுச் சீட்டுப் பெற்றவர்களை இந்தியாவுக்கு அனுப்புவதன் மூலம் தோட்டத்துறையில் தொழில் வாய்ப்புக்களை அதிகரிக்க முடியுமென அரச தரப்பில் கூறப்படுகின்றது, தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதற்கு அல்லது வேலை நாட்களை கூட்டுவதற்கு அரசாங்கம் நவீன பொருளாதாரத் திட்டங்களை அமுல்படுத்த முயல்வதே வேலையில்லாப்பிரச்சினையை தீர்க்க உதவும் மாறாக மலையகத் தொழிலாளர்களை இரு கூறாக்கி நாடு கடத்தி பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்''

இவ்வாறு மலையக மக்கள் முன்னணி அமைப்பாளர் கே. முத்துச்சாமி பெருந்தோட்ட தொழில்துறை அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பெருந் தோட்டங்கள் வழமைபோலவே இயங்கும் என்று அரசு அறிவித்திருந்தது. ஆனால் அதற்கு மாறாக அரச தரப்பில் வெளிவரும் செய்தி கவலையளிக்கிறது.

அரச செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது வரட்சி காரணமாக பதினைந்து நாட்கள் வேலை வழங்கப்படுவதாகவும் பத்து நாட்களுக்கான சம்பளத்தைக் கடனாக வழங்கப்படவும், வேலை அதிகரிக்கும் காலப்பகுதியில் அச்சம்பளத்தை மீள தொழிலாளர்களின் சம்பளத்தில் அறவிட தோட்டங்களை பொறுப்பேற்றுள்ள தனியார் கம்பனிகளுக்கு ஆலோசனை கூறியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இன்று முதல் ஓய்வூதிய கொடுப்பனவு

அக்டோபர் மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு இன்றுமுதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் தெரிவித்தார்

இம்முறை வவுச்சர்கள் நேரத்துடன் செயலகத்துக்கு வந்து சேர்ந்த போதிலும் நிதி நெருக்கடி காரணமாக ஓய்வூதியம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது

கொக்குவில் இந்துக்கல்லூரி

**பரிசளிப்பு விழா - 1992**

நேரம்:- காலை 9.30 மணி
காலம்:- 22-10-1992 வியாழன்
இடம்:- பிரதான மண்டபம்

பிரதம விருந்தினர்:-
திரு. இரா. சுந்தரலிங்கம்
(வடமாநில கல்விப்பணிப்பாளர்)


பரிசில் வழங்கல்:-
திருமதி தேவராணி சுந்தரலிங்கம்

பெற்றோர், பழைய மாணவர், நலன் விரும்பிகள் எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம். தயவு செய்து இவ் அழைப்பை ஏற்றுக் கொள்ளவும்.

நன்றி.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்

(சி-5247)



**வீரவேங்கை பிறேம**

(மரியதாசன் கோகுலவாசன்)

வீரப்பிறப்பு : 13 - 08 - 1965    வீரச்சாவு : 20 - 10 - 1988

வீரத்தின் விளைநிலமே
விடுதலையின் சுடரொளியே
உன் கால்தடங்கள் இருக்குமட்டும்
கவலையில்லை எங்களுக்கு
வழிகாட்ட அது போதும்
வரலாற்றை நாம் படைப்போம்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.    (3488)

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

## நினைவு கூருகின்றோம்...

## 1992-10-20

1987-ம் ஆண்டு இதேதினத்தில் மன்னாரில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 3-தமிழர்கள்

கேரதீவு இறங்குதுறையில் இந்தியப்படையினர் உலங்குவானூர்தியிலிருந்து மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 2-தமிழர்கள்.

யாழ்-சுண்டிக்குளி, உரும்பராய்ப்பகுதிகளில் இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட 6-தமிழர்கள்

1988-ம் ஆண்டு யாழ்ப்பாணப்பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய-

**பிறேம்/வாசன்** (மரியதாஸ் கோகுலவாசன் - ஆடியபாதம் வீதி, கொக்குவில்மேற்கு-யாழ்)

1990-ம் ஆண்டு மல்லாகம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் பலியான தமிழ்ப்பெண்.

மட்டக்களப்பில், இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட பெரிய புல்லுமலையைச்சேர்ந்த தமிழ் இளைஞன்.

வலி-வடக்குப்பகுதியில், மனைவியுடன் வீட்டிற்குள் இருந்த போது வெளியில் இழுத்து வந்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட கணவர்.

1991-ம் ஆண்டு மட்டக்களப்பு நகரப்பகுதியில் சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய-

**2-ம் லெப்.சரவணையாளன்/ஜெயா** (தங்கையா ஜெயக்குமார்- இருதயபுரம், மட்டக்களப்பு)

**ஜெகன்** (அன்ரனி சந்திரகுமார்-மட்டக்களப்பு)

சித்தன்கேணி, மாகியப்பிட்டியில், சிறிலங்கா விமானப் படையினரின் குண்டு வீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியதில் தந்தை, மகன், 6-வயதுப்பேரன் ஆகிய 3-தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-5249)

நல்லூர் [illegible] நூலகம்
யாழ்ப்பாணம்

### சிந்தனைக்கு

அர்மானவக் கூடி அடைய விரும்பும் மடமான் பறிகொடுக்க வேண்டும் காதலுக்காக தன்னுயிரை
- வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்- 20-10-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## ஜே. ஆரின் வழியில்......

"இந்தப் போரில் - தமிழருக்கு எதிரான போரில் - வெற்றி பெற எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரத் தயார்.'' இவ்வாறு முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா இஸ்ரேலின் உளவு ஸ்தாபனமான மொசாட்டுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளத் தீர்மானம் மேற்கொண்டபோது தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதியின் இத்திட்டத்தையே கடந்த வார 'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையின் கருத்தும் வெளிப்படுத்துவதாக உள்ளது. "இந்தியா - சிறிலங்கா ஆகிய இரு நாடுகளுக்கும் பொது எதிரி புலிகள் என்ற வகையில் இரு நாடுகளும் புலிகளுக்கு எதிராக கூட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்'' என 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தனா தமிழருக்கு எதிரான போரில், தான் குறிப்பிட்டது போலவே எந்த சக்திகளுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளத் தயங்கவில்லை. முஸ்லிம்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் ஒரு பகுதியில் திறக்க ஆவன செய்தார். அதே போன்று 'மொசாட்'டிடம் இருந்தும், இஸ்ரேலிய அரசிடம் இருந்தும் இராணுவத்திற்குப் பயிற்சிகளையும் ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டார்.

இதே போன்றே, நெருக்கடி கட்டு மீறிச் செல்லத் தொடங்கிய போது இந்தியாவுடன் தொடர்புகளை வளர்த்துக் கொண்டார். இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் நுழைய அனுமதி அளித்தார். ஆனால், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இத் தீர்மானத்தை சிங்களவர்களில் பெரும் பான்மையோர் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறிலங்காவில் இரத்த ஆறு ஓடியது. ஜே ஆரின் இந் நடவடிக்கைகளை எதிர்க் கட்சியினர் பலமாகக் கண்டித்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் எழுந்தன. கொழும்பிலிருந்து வெளிவரும் அனேகமான பத்திரிகைகளும் கண்டித்தன. இது இந்திய ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கம் என வர்ணிக்கப்பட்டது.

# ரிச்சர்ட் பத்திரண தலைமையில் சுதந்திரக்கட்சிக்குள் புதிய அணி

சிறிலங்கா சுதந்திரக்கட்சியில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு சார்பான அணியையோ அல்லது அவரது புதல்வன் அநுரா பண்டாரநாயக்காவுக்கு சார்பான அணியையோ சாராமல் தனித்துவமாக இயங்கும் எம்.பிக்கள் ஒன்றிணைந்து "ஜனஉறுமய'' (மக்கள் உரிமை) என்ற பெயரிலான புதிய அமைப்பென்றை அமைக்க உத்தேசித்துள்ளனர்.

பாராளுமன்ற எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான காலிமாவட்ட எம்.பி.ரிச்சாட் பத்திரனவின் தலைமையில் இயங்கி வரும் "ஜன உறுமயவில்'' 27 எம்பிக்கள் இணைவர் என்று சுதந்திரக்கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அமைப்பு சுதந்திரக் கட்சி எம்.பிக்களை மாத்திரம் கொண்டதாக இருக்கப்போவதில்லை ஏனைய கட்சிகளைச் சேர்ந்தவர்களும் இதில் இணைந்து கொள்ளலாம். சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உள்வீட்டு இழுபறியில் தாங்கள் எந்தப் பிரிவினரையும் ஆதரிக்கவும் இல்லை எதிர்க்கவும் இல்லை சுதந்திரமாக இயங்குவதே தங்களின் நோக்கம் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றி பாராளுமன்றத்திற்கு கூடுதலான அதிகாரங்களுடன் கூடிய அரசமைப்பை ஏற்படுத்த வேண்டும் வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என்ற கோரிக்கைகள் உட்பட 8 கோரிக்கைகளை "ஜன உறுமய'' வினர் சுதந்திரக் கட்சியின் எதிர்கால ஜனாதிபதி வேட்பாளரிடம் முன்வைக்கவுள்ளனர் சுதந்திரக் கட்சிக்குள் ஓர் பிரிவு எம்பிக்கள் களுத்துறை மாவட்ட எம்.பி.திலக் கருணரெத்தின தலைமையில் ஏற்கனவே "ஹெல உறுமய'' என்ற அமைப்பை ஸ்தாபித்திருக்கின்றார்கள் என்பது தெரிந்ததே.

## முஸ்லிம் எம்பிகள் பதவி விலகவேண்டும்

### ஹெல உறுமய கோரிக்கை

(கொழும்பு)

முஸ்லிம்களைப் பாதுகாக்க அரசாங்கம் தவறியுள்ளமையைக் கண்டித்து அரசாங்கக் கட்சியிலிருக்கும் முஸ்லிம் எம்பிக்கள் பதவி துறக்க வேண்டுமெனவும், முஸ்லிம் காங்கிரஸ் அரசுக்கான ஆதரவை மீளப்பெற வேண்டுமெனவும் ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளரான திலக் கருணாரத்னா கோரிக்கை விடுத்துள்ளார்.

### தேசிய பட்டியலில் தெரிவான

## சு. கட்சியினரை பதவிவிலக சிறிமாவோ குழு கோரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூலம் தேசியப் பட்டியிலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான அணியினர் பதவி விலகக் கோரியிருப்பதாகச் சொல்லப்படுகிறது எனினும் அநுராவும், ஹெலஉறுமய அணியினரும் இவர்களின் பதவி விலகல் கோரிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

## திலக் கருணாரத்னா சு. கட்சியில் இருந்து நீக்கம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளருமான திலக் கருணாரத்னா கட்சியிலிருந்தும் கட்சி நடவடிக்கைகளிலிருந்தும் இடை நிறுத்தப்பட்டிருப்பதாக கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்,

இதேவேளை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஒரு கூட்டத்தை கட்சித் தலைவியின் தலைமையில் நடத்தவுள்ளனர்-

## கைதான பிக்கு மீது மேலும் பல குற்றச்சாட்டு

(கொழும்பு)

ககாவத்தை பொலிசாரால் ஏமாற்று மற்றும் மோசடிச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்ட 47 வய்தான பிக்கு சதி நாச வேலைகளுடனும் தொடர்புபட்டிருந்தார் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இவர் சம்பந்தப்பட்ட ஆறு குற்றச்சாட்டுகள் ஏற்கனவே இருப்பதாகக் கூறியுள்ள அதிகார பூர்வ வட்டாரங்கள் பாணந்துறை, ஹோமகம மற்றும் பொலநறுவைப் பகுதிகளில் கிரிமினல் நடவடிக்கைகளிலும் இவர் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளன.

### மாணவர்களுக்கான உணவுமுத்திரை

பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட இலவச மதிய உணவு முத்திரைகளை மாணவர்கள் அடுத்த மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி ப. நோ. கூ, சங்கக் கிளைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். (42)

### அலுவலகம் இடமாற்றம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பணிமனைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிவந்த சங்கானை கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகம் கடந்த வாரம் தொடக்கம் சண்டிலிப்பாய்-உடுவில் டச்சு வீதியிலுள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கோழிகளுக்குத் தொற்று நோய் வராது தடுப்பு ஊசி போடுவது, பசுக்களுக்குச் செயற்கை முறையில் சினைப்படுத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்ந்தும் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (42)

## கைதான ரவிமஹாத்தயா ஜே.வி.பி.முக்கியபிரமுகராம்

(மாத்தளை)

ஜே, வி. பி யினரின் வன் செயல்கள் உச்சக்கட்டத்தில் இருந்த காலத்தில் அதன் முக்கியஸ்தர்களுள் ஒருவராக இயங்கியவர் என சந்தேகிக்கப்படும் நபரை எம்பிலிப்பிட்டியப் பொலிசார் கடந்த வாரம் கைதுசெய்துள்ளனர்.

ரவிமஹாத்தயா, பியசிறி முதலாளி, பியல்மஹாத்தயா ஆகிய பல்வேறுபெயர்களுடன் எம்பிலிப்பிட்டிய, ஹில்கமை, அம்பலாந்தோட்டை ஆகிய இடங்களில் நடமாடி வந்ததாக கூறப்படும் இந்நபர் ஜே, வி. பி. முக்கியஸ்தராக இருந்த வேளையில் சுமார் 60 கொலைகளைப் புரிந்துள்ளதாக விசாரணையின் போது ஒப்புக்கொண்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

முல்சிரிய பகுதியைச்சேர்ந்த இந்த நபரால் கொலையுண்டோரில், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், கிராம சேவகர்கள் போன்றோர்கள் அடங்குவதாகவும். அவர்களை எவ்வாறு கொலை செய்தார் என்பதை அந்நபர் விபரமாகத் தெரிவித்துள்ளதாகவும்பொலிசார் தெரிவித்துள்ளனர்,

மேலும் ஹில்கம அம்பலாந்தோட்டைப் பகுதி ஜே. வி. பி. தலைவராகவும் அப்பகுதி ஆயுதக் களஞ்சியப் பொறுப்பாளராகவும் இவர் இருந்துள்ளார்.

ஜே. வி பி. ஒழிப்பின் பின்னர் வீரகெட்டியவில் உள்ள விவசாயப் பண்ணை முகாமையாளராக சிறிது காலம் கடமையாற்றிய இவர் எம்பிலிப்பிட்டியில் விவாகமும் செய்துள்ளார். பாமடலையில் கண்ணிவெடி ஒன்றை இயக்கியதாகவும் சிலர் பொலிசில் வாக்குமூலம் அளித்துள்ளதாக பொலிஸ் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

## புரட்சியை நிதர்சனமாக்கும் படைப்பு பெருக வேண்டும் -பரதன்

(யாழ்ப்பாணம்)

தற்போதைய காலகட்டத்தில் புரட்சிகளை நிதர்சனமாக எழுதக்கூடிய எழுத்தாளர்கள் படைப்பாளர்கள் உருவாகவேண்டும் நமது தலைவர் பிரபாகரன் கூட இந்திய சுதந்திர போராட்ட கால நிகழ்வுகளை சித்தரிக்கும் "கல்லுக்குள் ஈரம்'' போன்ற நாவல்களையே விரும்பி வாசித்திருக்கிறார் என இயல் வாணனின் 'சுவடுகள்' நூல் வெளியீட்டு விழாவில் நிதர்சனம் பொறுப்பாளர் இ. பரதன் கூறினார்.

திரு. சொக்கலிங்கம் தலைமையில்நேற்றுக்காலை10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாபதி கலையரங்கில் நடைபெற்ற சுவடுகள் வெளியீட்டு விழாவில் இ. பரதன் மேலும் பேசுகையில்;

போராட்ட வரலாற்று நிகழ்வுகளை, பிரச்சினைகளை எடுத்துக் கூறும் ஆக்கங்களை தெளிவான நடைமுறையில் எழுதி வெளியிட படைப்பாளர்கள் முன்வர வேண்டும் என்றார்.

தொடர்ந்து திரு. செம்பியன் செல்வன் தமது ஆய்வுரையில் குறிப்பிடுகையில், இங்கு தற்போது நடைபெற்றுவரும் போராட்ட நிகழ்வுகளால் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றவர்கள் தமிழர்களுக்கு உதவுகிறோம்எனக் கூறி பலதரப்பட்ட எதிர்மறையான நிகழ்வுகளை அச்சிட்டு பத்திரிகைகளாகவும், இலக்கியங்களாகவும் வெளியிட்டு வருகிறார்கள் என்றார்.

இயல்வாணனின் சுவடுகள் நூல் வெளியீட்டுவிழாவில் மாகாணசபை பிரதி மாவட்ட ஆணையாளர் திரு. து வைத்திலிங்கம் அறிமுக உரையை நிகழ்த்தினார்.

திரு. அ. சாந்தன் ஆய்வுரையையும் திரு. இயல்வாணன் நூலாசிரியர் உரையையும் நிகழ்த்தினர் இதனைத் தொடர்ந்து முது கவிஞர் திரு. ந வீரமணி ஐயரின் "எம் வழிச் சுவடுகள்'' எனும் கவிதா நிகழ்வும் இடம்பெற்றது.

### இலவச ஆங்கில வகுப்பு

[கொழும்புத்துறை]

பாடசாலையை விட்டுவிலகியோருக்கான ஆங்கில வகுப்புகள் நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலைய மண்டபத்தில் மேற்படி வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றது என நிலையச் செயலாளர் அறியத் தருகின்றார். (24)

## அங்கோலாவில் மீண்டும்

## லண்டனில்

### ராமர் கோவில் விவகாரம்

யும் பொருட்படுத்தாமல், இஸ்ரேலிய நலன் காக்கும் பிரிவை கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் ஒரு பகுதியில் திறக்க ஆவன செய்தார். அதே போன்று 'மொஸாட்'டிடம் இருந்தும், இஸ்ரேலிய அரசிடம் இருந்தும்இராணுவத்திற்குப் பயிற்சிகளையும்ஆயுதங்களையும் பெற்றுக் கொண்டார்.

இதே போன்றே, நெருக்கடி கட்டு மீறிச் செல்லத் தொடங்கிய போது இந்தியாவுடன் தொடர்புகளை வளர்த்துக் கொண்டார். இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் நுழைய அனுமதி அளித்தார். ஆனால், திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் இத் தீர்மானத்தை சிங்களவர்களில் பெரும் பான்மையோர் ஏற்றுக் கொள்ளவில்லை. சிறிலங்காவில் இரத்த ஆறு ஓடியது. ஜே ஆரின் இந் நடவடிக்கைகளை எதிர்க் கட்சியினர் பலமாகக் கண்டித்தனர். ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் எழுந்தன. கொழும்பிலிருந்து வெளி வரும் அனேகமான பத்திரிகைகளும் கண்டித்தன. இது இந்திய ஏகாதிபத்தியத்தின் விரிவாக்கம் என வர்ணிச்கப்பட்டது.

இந்நிலையில் ஆட்சிச்குவந்தபிரேமதாசா இந்திய இராணுவத்தை இலங்கையை விட்டு வெளியேறுமாறு கோரிச்கை விடுத்தார். இலங்கையில் சிறிலங்கா அராசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை இதில் அந்நிய சக்திகளின் தலையீடு ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல என்ற ரீதியில் பிரேமதாசா செயற்பட்டார். இதற்குச் சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகளும் ஆதரவு வழங்கின- புலிகளின் தாக்குதலினால் திணறிக்கொண்டிருந்த இந்திய இராணுவமும் இதைச் சாட்டாக வைத்து வெளியேறியது.

ஆனால் இன்று மீண்டும் தமிழருக்கு எதிரான போரில் இந்தியாவின் உதவியைப் பெறவேண்டும் எனச் சிங்கள பேரினவாதப் பத்திரிகைகள் கோரத் தொடங்கியுள்ளன. அதாவது திரு ஜே ஆர் கடைப்பிடித்த ''எந்தப் பேயுடனும் கூட்டுச் சேரலாம்'' என்ற கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு அரசை வற்புறுத்தியுள்ளனர்.

இதன் மூலம் இலங்கையில் சிறிலங்கா இராணுவத்திற்கும் - விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் போர் ஓர் உள்நாட்டுப் போர் அல்ல என்பதை பேரினவாத பத்திரிகைகள் ஏற்றுக்கொள்வதாகத். தெரிகிறது அத்தோடுபுலிகளுடனான போரில் சிறிலங்கா இராணுவத்தால் வெற்றி கொள்ள முடியாது என்பதையும், மறைமுகமாக வேனும்ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலைமையும் உருவாகியுள்ளது.

இவ் வருட ஆரம்பத்தில் இருந்து போரில் புலிகளின் கை ஓங்கி வருவதும், இராணுவத்திற்கு பெரும் இழப்புக்கள் ஏற்பட்டு வருவதும் இப் பேரினவாதப் பத்திரிகைசளுக்கு போரில் வெல்ல முடியாது என்பதை உணர்த்தியதோடு, மனவிரக்தியையும் ஏற்படுத்தியுள்ளன. அதுவும் கட்டைக் காட்டில் பெருந்தொகை ஆயுதங்களை புலிகளிடம் பறி கொடுத்தமை அவர்களை விரக்தியின் விளிம்புக்குத் தள்ளியுள்ளது. இந்நிலையில், புலிகளை தோற்கடிக்கஅந்நிய இராணுவஉதவிகளைப் பெறுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. ஆகையினால் மீண்டும் பேயுடனாவது, பூதத்துடனாவது கூட்டுச்சேர விரும்புகின்றன. அதாவது பௌத்த பேரினவாதத்திற்கு தமிழரின் விடுகலைப் போராட்ட வளர்ச்சி பேயை விடவும் பூதத்தை விடவும் பயங்கரமானதொன்றாகத் தெரிகிறது என்பதே உண்மை

---

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளருமான திலக் கருணாரத்னா கட்சியிலிருந்தும் கட்சி நடவடிக்கைகளிலிருந்தும் இடை நிறுத்தப்பட்டிருப்பதாக கட்சித் பண்டாரநாயக்கா அறிவித்துள்ளார்,

இதேவேளை கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் இன்று பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் ஒரு கூட்டத்தை கட்சித் தலைவியின் தலைமையில் நடத்தவுள்ளனர்-

## கைதான பிக்கு மீது மேலும் பல குற்றச்சாட்டு

(கொழும்பு)

ககாவத்தை பொலிசாரால் ஏமாற்று மற்றும் மோசடிச் செயல்களுக்காகக் கைது செய்யப்பட்ட 47 வய்தான பிக்கு சதி நாச வேலைகளுடனும் தொடர்புபட்டிருந்தார் என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இவர் சம்பந்தப்பட்ட ஆறு குற்றச்சாட்டுகள் ஏற்கனவே இருப்பதாகக் கூறியுள்ள அதிகார பூர்வ வடடாரங்கள் பாணந்துறை, ஹோமகம மற்றும் பொலநறுவைப் பகுதிகளில் கிரிமினல் நடவடிக்கைகளிலும் இவர் ஈடுபட்டிருந்ததாகத் தெரிவித்துள்ளன.

---

கிளைகளில் இருந்து பெற்றுக் கொள்ளலாம். (42)

## அலுவலகம் இடமாற்றம்

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பணிமனைக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கிவந்த சங்கானை கால் நடை வைத்திய அதிகாரி அலுவலகம் கடந்த வாரம் தொடக்கம் சண்டிலிப்பாய்-உடுவில் டச்சு வீதியிலுள்ள தனியார் கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

கோழிகளுக்குத் தொற்று நோய் வராது தடுப்பு ஊசி போடுவது, பசுக்களுக்குச் செயற்கை முறையில் சினைப் படுத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்ந்தும் இந்த அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (42)

---

திரு. சொக்கலிங்கம் தலைமையில்நேற்றுக்காலை10.00 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாபதி கலையரங்கில் நடைபெற்ற சுவடுகள் வெளியீட்டு விழாவில் இ. பரதன் மேலும் பேசுகையில்;

போராட்ட வரலாற்று நிகழ்வுகளை, பிரச்சினைகளை எடுத்துக் கூறும் ஆக்கங்களை தெளிவான நடைமுறையில் எழுதி வெளியிட படைப்பாளர்கள் முன்வர வேண்டும் என்றார்.

தொடர்ந்து திரு. செம்பியன் செல்வன் தமது ஆய்வுரையில் குறிப்பிடுகையில், இங்கு தற்போது நடைபெற்றுவரும் போராட்ட நிகழ்வுகளால் புலம்பெயர்ந்து வெளிநாடு சென்றவர்கள் தமிழர்களுக்கு உதவுகிறோம்எனக்

தொடர்ந்து முது கவிஞர் திரு. ந வீரமணி ஐயரின் ''எம் வழிச் சுவடுகள்'' எனும் கவிதா நிகழ்வும் இடம்பெற்றது.

## இலவச ஆங்கில வகுப்பு

[கொழும்புத்துறை]

பாடசாலையை விட்டுவிலகியோருக்கான ஆங்கில வகுப்புகள் நல்லூர் முருகன் சன சமூக நிலையத்தில் இலவசமாக நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலைய மண்டபத்தில் மேற்படி வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெற்று வருகின்றது என நிலையச் செயலாளர் அறியத் தருகின்றார். (24)

---

## அங்கோலாவில் மீண்டும் உள்நாட்டுப் போர்

(லுவாண்டா)

அங்கோலாவில் யூனிட்டா விடுதலை இயக்கத்திற்தும் அரசுப் படைகளுக்கும் இடையே புதிதாக சண்டைகள் மூண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன இச் சண்டைகளில் பலர் உயிரிழந்துள்ளனர் என்றும், எனினும் ஆட்சேதம் பற்றிய சரியான தகவல்கள் தெரிய வரவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதிபர் பதவிக்கான இரண்டாம் சுற்று வாக்குப்பதிவு ஒத்திப் போடப்பட்டிருப்பதாகவும், யூனிட்டா இயக்கம் ஆயுதங்களைக் கீழே வைத்து இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் செய்து கொள்ளப்பட்ட சமாதான உடன்படிக்கையை மதித்து நடந்தால் மட்டுமே இரண்டாம் சுற்று வாக்குப் பதிவு நடத்தப்படும் என்றும் ஆளும் எம்.பி.எல்.ஏ. கூறியுள்ளது

முன்னாள் பிரதமர் வி. பி சிங்கிற்கு

## உத்தரப் பிரதேசச் சிறையில் மின் அதிர்ச்சி பாய்ச்சல்

(டில்லி)

ராம் சோலா பகுதியில் உத்தரப் பிரதேச மாநில பொலிசாரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் வி. பி சிங் சிறையில் சாதாரண கிரிமினல் கைதிகளைப் போல நடத்தப்படுவதாகவும் அவருக்கு மின்சார அதிர்ச்சி ஊட்டப்பட்டதாகவும் ஜனதாக்கட்சி கூறியுள்ளது.

உத்தரப் பிரதேசத்தின் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சியினால் இக் கொடுமை இழைக்கப்படுவதாக ஜனதாக்ட்சி எம்பியான ஜேம்பால் கூறியுள்ளார்.

இந்தியா - உக்ரைன்

## பாதுகாப்பு உடன்பாட்டில் முட்டுக்கட்டை நிலை

பாதுகாப்பு ஒப்பந்தங்கள் தொடர்பாக இந்தியாவுக்கும் உக்ரையினுக்கும் இடையே நடைபெறும் பேச்சுவார்த்தைகள் ஒருமுட்டுக்கட்டை நிலமையை அடைந்திருப்பதாக உக்ரையின் இராணுவ அமைச்சர் விக்டர் அனடோனால் கடந்தவெள்ளியன்று தெரிவித்தார்

உக்ரையனுடனான பாதுகாப்பு உபகரண கொள்வனவிற்கு டாலர்களில் கொடுப்பனவைச்செய்ய இந்தியா மறுப்பதையடுத்தே இந்த முட்டுக்கட்டை நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது.

இது காலவரை இந்தியா பண்டமாற்று அடிப்படையில் அல்லது இந்திய ரூபாவில் தான்கொடுப்பனவைச் செய்ய இணங்கியது உக்ரையினில் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்காக இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் அங்கு சென்றிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## லண்டனில் குண்டுவெடிப்பு

[லண்டன்]

லண்டனில் நேற்று அதிகாலையில் வெவ்வேறு இடங்களில் இரு குண்டு வெடிப்புக்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் எவரும் காயமடையவோ உயிரிழக்கவோ இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது இக் குண்டு வெடிப்புகளுக்கு அயரிஷ் குடியரசு இராணுவத்தினரே பொறுப்பு என்று பொலீசார் கூறியுள்ளனர்.

## கொரில்லா சுரண்டி பயணி மரணம்

(டோக்கியோ)

கொரிலாக்களைக் காண வேண்டும் என்பதற்காக ஆபிரிக்கா சென்ற ஜப்பானிய உல்லாசப் பயணி ஒருவர் கொரில்லா சுரண்டியதால் ஏற்பட்ட காயத்தால் உயிரிழந்தார்.

குறுகிய கால விஜயமொன்றில் லயரே சென்ற 45 வயது ஜப்பானிய உல்லாசப் பயணியின் கால்களைக் கொரில்லா சுரண்டி இரண்டு வாரங்களின் பின்னர் உயிரிழந்தார்.

## இந்தியப் பிரதமர் நேபாளம் விஜயம்

(டில்லி)

இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்று நேபாளம் நாட்டிற்குப் புறப்பட்டார். அவருடன் வெளியுறவுச் செயலாளர் ஜே. என். டிக்சிற் வெளி விவகார இணை அமைச்சர்ஆர். கே. பாட்டியா ஆகியோரும் அடங்கிய உயர் நிலைத் தூதுக்குழுவொன்று சென்றுள்ளது.

இவ் விஜயத்தின் போது உயர் நிலையில் இருதரப்பு உறவுபற்றி பேசப்படும் என்றும், இவ் விஜயம் மூன்றுநாள் நிலைக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராமர் கோவில் விவகாரம்

## நாட்டின் ஒருமைப்பாட்டுடன் தொடர்புபட்டு விட்டது

--அத்வானி

[டில்லி]

அயோத்திப் பிரச்சினையானதுதற்போதுராமர் ஆலயம் கட்டுவது என்பதை மீறி நாட்டின்ஒற்றுமையோடும், ஒருமைப்பாட்டோடும் தொடர்புடைய விடயமாகிவிட்டது என்று லோகசபையின் எதிர் கட்சித் தலைவரான எல். கே. அத்வானி கூறியுள்ளார்

கட்சியின் புதுடில்லிக்கிளை ஏற்பாடு செய்த கூட்டமொன்றில் பேசிய அவர் மேலும் கூறுகையில்: ராமர் பிறந்த இடத்தில் ஆலயம் ஒன்றைக் காணிக்கையாக்குவதால் நாட்டின் கலாசாரம் மற்றும் ஒற்றுமை வலுப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

## நரசிம்மராவ் அரசிற்கு கால அவகாசம் இல்லை

விஷ்வ இந்து பரிஷத்

(டில்லி)

ராம ஜென்ம பூமி-பாபர் மசூதி பிரச்சினையைத் தீர்ப்பதில் அரசுக்கு மேலும் கால அவகாசம் வழங்கப் போவதில்லையென்று விஸ்வ இந்து பரிஷத் கூறியுள்ளது.

மோடி நகரில் செய்தியாளரிடையே பேசிய விஷ்வஇந்து பரிஷத்தின் செயலாளர் அசோக் சிங்கர் மேலும் கூறுகையில்; அரசு கோரிய மூன்று மாத கால அவகாசம் இம் மாதம் இருபத்து நான்காம் திகதியுடன் முடிவடைவதாகக் குறிப்பிட்டுக் காட்டினார்.

உத்தரப் பிரதேசத்தின்

## ராமராவ் மீது வழக்கு ஆந்திரமுதல்வர் கோரிக்கை

(ஹைதராபாத்)

வருணவாகினி என்ற பெயரில் மலிவு விலைச் சாராயத்தை அறிமுகப்படுத்தியமைக்காக தேசிய முன்னணியின் தலைவரும், முன்னாள் ஆந்திர முதல்வருமான என். டி. ராமராவ் மீது வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்யும்படி ஆந்திரப்பிரதேச மாநிலத்தின் புதிய முதல்வரான விஜய பாஸ்கரரெட்டி கேட்டுக் கொண்டுள்ளார்.

மாநிலத்தில் சாராய விற்பனை அதிகரித்தமைக்காக மாநில அரசை நீதிமன்றத்திற்கு இழுக்கும்படி ராமராவ் விடுத்த கோரிக்கைக்கு முதல்வர் விஜயபாஸ்கரரெட்டி இவ்வாறு பதிலளித்திருப்பதாக கூறப்படுகிறது.

---

குறிப்பிட்ட

ஆனால் தற்பொழுது யாழ். அரச அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள பொருள் பட்டியலில் 750 மெற்றிக் தொன் சீனியே அனுப்பப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.

இதற்கிடையில் யாழ் குடாநாட்டில் தற்பொழுது சீனி பெரும் தட்டுப்பாட்டில் உள்ளதுஎன்பதுகுறிப்பிடத்தக்கது

மேலும் மைசூர்ப் பருப்பில் 100 மெற்றிக் தொன் அனுப்பப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது எனினும் தற்பொழுது 50 மெற்றிக் தொன் பருப்பே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது (பா)

ஈழநாதம்

# சிறிலங்கா படை முகாம்களில் 2000 பேர் தடுத்துவைப்பு

## -மனித உரிமை குழுவிடம் முறையீடு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் நிலையங்களிலும் இராணுவ முகாம்களிலும் நீதி விசாரணை இன்றி தடுத்துவைக்கப்பட்டுள்ளோரில் சுமார் 2,000 பேரின் பெயர் விபரங்களை மனித உரிமை மீறல் தொடர்பான குழுவிடம் சமர்ப்பிக்க போவதாக எதிர்கட்சிகளின் கூட்டுமுன்னணியின் தலைவர் மகிந்த ராஜபக்ச அறிவித்துள்ளார்.

பத்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு சிறிலங்காவிற்கு வந்த மனித உரிமை மீறல் குழுவின் அதிகாரிகளைச் சந்தித்த போது மேற்படி விடயம் தொர்பாக அவர் கலந்துரையாடினார் குறிப்பாக கைது செய்யப்பட்டுப் பல மாதங்களாக தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர்களின்பெயர்விபரங்களைவெளிப்படுத்தப்படாமையால் அவர்கள் பல துன்பங்களை அனுபவித்து வருவதாகவும் தெரிவித்த அவர் அவர்களது விபரங்களை வெளியிட வேண்டியதின் அவசியத்தை தான் வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை காணாமல் போனோர் தொடர்பாக ஜனாதிபதி கமிஷன் இதுவரை 657 விண்ணப்பங்கள் மட்டுமேகிடைத்துள்ளபோதும் இவர்கள் மீது இதுவரை எவ்வித விசாரணையும் மேற்கொள்ளடபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அருத்த ஒரு சந்தர்ப்பத்திற்கு நாம் காத்திருக்கிறோம்

**- சிவசிதம்பரம்**

(கொழும்பு)

பெப்பரவரி 1989 தேர்தலில் போட்டியிடுவதற்கு நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்ததன் மூலம் சிறிலங்கா அரசியலமைப்பின் ஆறாவது திருத்தத்தை ஏற்று சத்தியப் பிரமாணம் செய்திருப்பதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் கூறியுள்ளார்.

ஐலன்ட் வார இதழுக்கு அளித்த பேட்டியில் அவர் மேலும் கூறுகையில், இத் தேர்தலின் மூலம் மக்களால் நிராகரிக்கப்பட்ட பின்பு பின் கதவால் பாராளுமன்றம் செல்ல விரும்பவில்லை என்றும் குறிப்பிட்டார். எனினும் அடுத்த ஒரு சந்தர்ப்பத்திற்காக தானும், தமது கட்சியும் காத்திருப்ப தாகவும், அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணி திறம்படச்செய்யும் என்று தான் திடமாக நம்புவதாகவும் தெரிவித்தார். அத்துடன் தேவை ஏற்பட்டால் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் மனித உரிமை மீறல் தொடர்பான வழக்குகளில் ஆஜராக தான் தயாராக இருப்பதாகவும், அதற்காக நீதிமன்றம் சென்று வாதாட விருப்பதாகவும் கூறியுள்ளார்

# நீதிமன்ற பாதுகாப்பிலிருந்து போதைப் பொருள் மறைவு

(கொழும்பு)

பல மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த ஹெரோயின் போதைப் பொருள் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சமயம் காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தாண்யரான நாசர் மற்றும் பிலிப்பைன்ஸ் பிரஜையான பிற்றாலோக் என்போரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மேற்படி போதைப் பொருள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தடயப் பொருளாக வைக்கப்பட்டிருந்த போது மாயமாய் மறைந்திருப்பதாக குற்றப்புலன் விசாரணைப் பிரிவு பொலிசார் கூறியுள்ளனர்.

இந்தப் போதைப் பொருள் கடத்தலுக்காக பாகிஸ்தானிய பிரஜைக்கு ஆயுள்காலத் தண்டனையும், பிலிப்பைன்ஸ் பிரஜைக்கு பத்தாண்டு கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

குற்றவிசாரணை பொலிஸ் பிரிவின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பார்சலில் எட்டு கிலோ நிறையுடைய ஹெரோயின். தெருவோர விலையின் படி சாதாரணமாக மூன்று மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்ததாகும் என்று தெரிவித்தார்.

# பௌதிகவியல் மீள்பரீட்சை அனுமதி அட்டை பெறலாம்

இம்மாதம் இருபத்தாறாம் திகதிநடைபெறவுள்ளபௌதிக ... பெறும் எனவும், 45,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு

ராணுவ

நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்று அரசு கோரியிருந்த போதிலும், பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறப்படும் வடமத்திய மாகாணம் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இராணுவத்தில் உள்ள நிலைமைகளைச் சீர்திருத்தி இராணுவத்தைத் தகுந்த நிலைக்குக் கொண்டுவர அரசு கையாளப்போகும் வழிவகை

# ஆயுர்வேத கல்லூரியை அரசு பொறுப்பேற்கும்

(வேலணை)

யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுர் வேத வைத்தியக் கல்லூரியை அரசாங்கம் வெகு விரைவில் பொறுப்பேற்று நடாத்துவதற்கு முன்வந்துள்ளது.

இக்கல்லூரியை அரசு உடன் பொறுப்பேற்று நடாத்துமாறு கல்லூரியின் தற்போதைய அதிபர் வைத்திய கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அரசாங்கத்தை கேட்டிருந்தார்

யாழ். அரசாங்க அதிபர் இது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டதன் பேரில் வடக்கு கிழக்கு மாகாண அரசின் மாற்று மருத்துவ முறைப் பிரதிப் பணிப்பாளர் திரு மு. உரோமகேசன் யாழ் லங்கா சித்த ஆயுர் வேத வைத்தியக் கல்லூரியின் அதிபருக்கு இக் கல்லூரியை அரசு பொறுப் பேற்று நடாத்துவதற்குரிய சகல விபரங்களையும் உடன் அனுப்பி வைக்குமாறு கேட்டுள்ளார்.

## யானை தாக்கி மரணம்

(குருநகர்)

கடந்த 16ஆம் திகதிவெள்ளி இரவு பூநகரி-பாலாவிப் பகுதியை நோக்கி கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்ட வேளை பீதியுடன் காட்டுக்கு ஓடியவரை யானை தாக்கியதில் அவர் மரணம் அடைந்தார்

மேற்படி சம்பவத்தில் கிளிநொச்சி 8 ஆம் வாய்க்காலில் இருந்து மீன் கொள்வனவு செய்யச் சென்றிருந்த வியாபாரியான அமலன் (வயது 33) என்பவரே யானையால் தாக்குண்டு மரணமானவரென்று தெரிவிக்கப்படுகிறது. (21)

மன்னார்

கத்தில் இலங்கையின் திருப்பீடத் தூதுவர் பேரருட் திரு. பிரான சுவாபக்கே ஆண்டகை கொழும்பு மறை மாவட்ட பேராயரும் இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவருமாகிய பேரருட் திரு. நிக்கலஸ் மாக்கஸ் பெர்னான்டோ ஆண்டகை அவர்களும் இலங்கையின் ஏனைய கத்தோலிக்க மறை மாவட்டங்களின் ஆயர்களும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

சிறிலங்கா

ந்த செலவீட்டில் இராணுவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொண்டிருப்பது தெரிந்ததே.

அரசாங்கம் தற்போது பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி இருப்பதாகவும், அதனால் இராணுவத்தினருக்கு தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இவ்வேளையில் கிழக்கு ஆசிய நாடு ஒருவருடப் ஒத்தி வைக்கப்பட்ட கடன் அடிப்படையில் இவ் ஆயுத தளபாடங்களை வழங்க முன் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பதிவுக் கடிதம் பெறலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்பு 1991/92 கல்வியாண்டிற்குரிய கலை முதற்தேர்வு, வர்த்தக முதற் தேர்வுக்குப் பதிவு செய்ய விண்ணப்பித்த விண்ணப்பகாரிகள் தமது பதிவுக்கடிதத்தை எதிர்வரும் வியாழக்கிழமை வெளிவாரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாணவர்களுக்கான பல்கலைக்கழக பதிவு ஒக்டோபர் 24 ஆம் திகதி மாலை 2 மணிக்கு கைலாசபதி கலை அரங்கில் நடைபெறவுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன் 1990 91 கல்வி ஆண்டிற்கு யாழ் பல்கலைக் கழகத்தில் பதிவு செய்து வெளிவாரிப் பரீட்சைக்கு தோற்றி இரண்டாவது வருடத்திற்கு பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள் தமது பதிவுக் கடிதத்தை எதிர்வரும் 22-ம்திகதி முதல் வெளிவாரிப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈடுபட்ட

தப்படும் இக் காலகட்டத்தில் இவர் சமூக சீர்கேட்டு நடவடிக்கையில் ஈடுபட்டமையால் மரணதண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது

பேராதனை

போது அதிகாலை 2-45 மணியளவில் முகத்தைத் துணியால் மூடியபடி திடீரென பிரவேசித்த சிலர் மின்விளக்குகளை அணைத்துவிட்டு தம்மைத் தாக்கியதாக தமிழ் மாணவர் இருவர் பீடாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையுள்ளது)

# மருந்துகளின் பட்டியல் செயலாளரிடம் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் பி. இரத்தினசபாபதி வட பகுதிக்குத் தேவைப்படும் மருந்து வகைகள் அடங்கிய பட்டியல் ஒன்றை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையச் செயலாளரிடம் கையளித்தார்.

1992 மருந்துத் தேவையில் இது வரை கொழும்பிலிருந்து பெற்றுக் கொண்டபகுதியைத் தவிர பாக்கி மருந்து வகைகளே வந்து சேரவில்லை என்று மேற்படி சுகாதார சேவைகள் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

அரச சார்பற்ற நிறுவனங்களின் செயலாளர் நேற்றுக் காலை வட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரைச் திணைக்களத்தில் சந்தித்துப் பேசிய போதே மருந்துத் தேவைகள் விபரம் அவரிடம் கொடுக்கப்பட்டது.

மருந்து யாழ்ப்பாணம் கொண்டு வருவது தொடர்பான தடைகள் குறித்து இணையம் கலந்தாலோசித்து மருந்து கொணரும் ஒழுங்குகளை மேற்கொள்ளப் போவதாக இணையத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## புறக்கையின் ஊசி முடிவடைந்தது

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலையின் வெளிநோயாளர் சிகிச்சைப் பிரிவில் ''புறக்கையின்'' என அழைக்கப்படும் பென்சிலின் ஊசிமருந்து முற்றாக முடிவடைந்து விட்டது. இதனால் நேற்று பெருந் தொகையான நோயாளர்கள் அங்கிருந்து ஏமாற்றத்துடன் வீடுதிரும்பினர்

மேற்படி பென்சிலின்மருந்து நோயாளி ஒருவருக்கு 3 அல்லது 5 தடவைகள் தொடர்ச்சியாக ஏற்றப்பட வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது

(ப)

## முதலாவது வருட மாணவர் நவம்பர் 2-ல் விரிவுரை

யாழ். பல்கலைக்கழக கலை வர்த்தகம், முகாமைத்துவம், நுண்கலை ஆகிய துறைகளில் முதலாவது வருட மாணவர்களுக்கான விரிவுரைகள் நவம்பர் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. அன்றைய தினம் இம்மாணவர்களுக்கான வரவேற்புரை கைலாசபதி கலையரங்கில் துணைவேந்தர் தலைமையில் நடைபெறவுள்ளது.

## ஒரு சிப்பாய் படுகாயம்

முல்லைத்தீவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலொன்றில்ஒருசிப்பாய்படுகாயமடைந்ததாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

உ
சிவமயம்

சபிண்டீகரண அழைப்பிதழ்

அமரர்

செல்லையா தங்கம்மா

சென்ற 21-09-1992 திங்கட்கிழமை இறைவனடி எய்திய எமது குடும்பத்தலைவி செல்லையா தங்கம்மா (மண்கும்பான் மேற்கு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20-10-92 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றியிலும், வீட்டுக்கிருத்தியம் 21-10-92 புதன்கிழமை பகல் 12 00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சமுகமளித்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லையா சிவபாதலிங்கம்
191H, 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
பிள்ளைகள்
(மண்கும்பான்)

[3493]

மரண அறிவித்தல்

பல மில்லியன் ரூபா பெறுமதிவாய்ந்த ஹெரோயின் போதைப் பொருள் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த சமயம் காணாமற் போயிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானியரான நாசர் மற்றும் பிலிப்பைன்ஸ் பிரஜையான பிற்றாலோக் என்போரிடமிருந்து கண்டுபிடிக்கப்பட்ட மேற்படி போதைப் பொருள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தடயப் பொருளாக வைக்கப்பட்டிருந்த போது மாயமாய் மறைந்திருப்பதாக குற்றப்புலன் விசாரணைப் பிரிவு பொலிசார் இந்தப் போதைப் பொருள் கடத்தலுக்காக பாகிஸ்தானிய பிரஜைக்கு ஆயுள்காலத் தண்டனையும், பிலிப்பைன்ஸ் பிரஜைக்கு பத்தாண்டு கடுழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டிருந்தது.

குற்றவிசாரணை பொலிஸ் பிரிவின் பேச்சாளர் ஒருவர் கூறுகையில் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட பார்சலில் எட்டு கிலோ நிறையுடைய ஹெரோயின். தெருவோர விலையின் படி சாதாரணமாக மூன்று மில்லியன் ரூபா பெறுமதி வாய்ந்ததாகும் என்று தெரிவித்தார்.

# பௌதிகவியல் மீள்பரீட்சை அனுமதி அட்டை பெறலாம்

இம்மாதம் இருபத்தாறாம் திகதிநடைபெறவுள்ளபௌதிகவியல் II ற்கான மீள் பரீட்சைக்குரிய அனுமதி அட்டைகள் நாடெங்கும் அனுப்பப்பட்டிருப்பதாக கொழும்பில் கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சுமார் 318 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும் எனவும், 45,000 பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றுவர் எனவும் கூறிய அந்த அதிகாரி இவ்வாரமுடிவுக்கு முன்பு அனுமதி அட்டை கிடைக்கப்பெறாதோர்கல்வித்திணைக்களத்தோடுதொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்தார்.

# லெப். கேணல் சந்தோஷம் நினைவு நிகழ்வுகள்

நாளை பிற்பகல் 5-00 மணியளவில் அரியாலை லெப். செல்லக்கிளி அம்மான் வீடமைப்புத் திட்டத்தில் திருகோணமலை மாவட்ட இடம்பெயர்ந்த மக்களால் முன்னாள் திருகோணமலை மாவட்டத் தளபதியும் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினருமான லெப். கேணல் சந்தோஷம் மாஸ்டர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம் நடாத்தப்படவுள்ளது.

இச்கூட்டத்தில் விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்கள். இதைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளது. கலை நிகழ்ச்சியின் சிறப்பு அம்சமாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ். கலை பண்பாட்டுக் கழகத்தினர் ஆதரவில் திருமலை மாவட்ட இடம்பெயர்ந்த கலைஞர்கள் வழங்கும் 'காணி நிலம் வேண்டும்' என்னும் நாடகமும் யாழ். கலை பண்பாட்டுக் கழகத்தினரின் 'அவலங்கள்' என்னும் நாடகமும் இடம்பெறவுள்ளன.

# மேஜர் முரளி நினைவு இறுதிப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மேஜர் முரளி நினைவு யாழ். மாவட்ட விளையாட்டு இறுதிப் போட்டிகள் இன்றுகாலை ஆரம்பமாகின்றன.

காலை 9-00 மணிக்கு வலைப்பந்தாட்ட போட்டியில் மகாஜனாக் கல்லூரியை எதிர்த்து உடுவில் மகளிர் கல்லூரியும் கயிறிழுத்தல் பெண்கள் பிரிவில் வல்வை மகளிர் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக்கல்லூரியும் கயிறிழுத்தல் ஆண்கள் பிரிவில் சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து மெமோறியல் கல்லூரியும் மோதுகின்றன

இதே வேளை 11, 13 வயது ஆண், பெண் இருபாலாருக்குமான 100 மீற்றர் இறுதிப் போட்டியும் நடைபெறவுள்ளது.

மாலை 4-00மணிக்கு யாழ். மருத்துவபீட மைதானத்தில் உதைபந்தாட்ட இறுதி ஆட்டம் நடைபெறவுள்ளது இதில் விக்கினேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் மோதவுள்ளது.

இவர்கள் மீது இதுவரை எவ்வித விசாரணையும் மேற்கொள்ளடபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

---

ராணுவ

நிலைநிறுத்தப்பட்டுள்ளது என்று அரசு கோரியிருந்த போதிலும், பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறப்படும் வடமத்திய மாகாணம் புலிகளின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது என்றும் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்கள்.

இராணுவத்தில் உள்ள நிலைமைகளைச் சீர்திருத்தி இராணுவத்தைத் தகுந்த நிலைக்குக் கொண்டுவர அரசு கையாளப்போகும் வழிவகைகள் பற்றி எதுவும் தெளிவாகத் தெரியவில்லை. இரண்டாம் ஈழப்போரில் படையில் காயப்பட்டவர்கள், மரணமடைந்தவர்களால் இராணுவத்திலும் தொண்டர் படையிலுமாக மொத்தம் 10,000 வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த வெற்றிடங்களுக்கு ஆள் சேர்ப்பதற்கு கல்வித் தகைமைகளைக் குறைத்தும் கூட, நேர்முகத் தெரிவுக்கு தோற்றும் இளைஞர்களின் எண்ணிக்கை சமீப காலங்களில் குறைந்து காணப்படுகிறது.

இவ்வாறு அவதானிகள் மேலும் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தமிழீழத்தை பலவந்தமாக அமைக்கலாம் என்ற புலிகளின் நம்பிக்கையை இராணுவத் தலைமையில் செய்யப்படும் மாற்றங்கள் தடுத்து நிறுத்திவிட முடியாது என்றும்-

கடந்த காலங்களில் புலிகள் வெற்றிகரமான பல தாக்குதல்களை தொண்டர் படைப் பிரிவுகள்மேல் நடத்தியுள்ளார்கள். வடபகுதி யுத்த முனையில் படைகள் ஈடுபட்டுள்ளதால் இராணுவத் தலைமை தொண்டர் படையைக் கிழக்கிலும் பக்கத்து மாகாணமான வடமத்திய மாகாணத்திலும் கடமையில் ஈடுபடுத்த வேண்டியுள்ளதாயிற்று.

இராணுவத்தை விட்டு மாதாந்தம் ஓடுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. வட- கிழக்கு யுத்த அனுபவஸ்தர்களான லெப்.ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவ, விஜய விமலரெட்ணா மற்றும்நான்கு உயர் அதிகாரிகளினதும் திடீர் மரணமும் பாதுகாப்புப் பலவீனமடைந்ததற்குக் காரணம் என்று அவதானிகள் மேலும் கூறியுள்ளனர்.

சிறிலங்கா

ந்த செலவீட்டில் இராணுவத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொண்டிருப்பது தெரிந்ததே.

அரசாங்கம் தற்போது பெரும் நிதி நெருக்கடிகளை எதிர்நோக்கி இருப்பதாகவும், அதனால் இராணுவத்தினருக்கு தேவையான தளபாடங்களைக் கொள்வனவு செய்வதில் பெரும் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இவ்வேளையில் கிழக்கு ஆசிய நாடு ஒருவருடப் ஒத்திவைக்கப்பட்ட கடன் அடிப்படையில் இவ் ஆயுத தளபாடங்களை வழங்க முன் வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஈடுபட்ட

தப்படும் இக் காலகட்டத்தில் இவர் சமூக சீர்கேட்டு நடவடிக்கையில் ஈடுபட்டமையால் மரணதண்டனை வழங்கப்பட்டதாக விடுதலைப் புலிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

பேராதனை

போது அதிகாலை 2-45 மணியளவில் முகத்தைத் துணியால் மூடியபடி திடீரென பிரவேசித்த சிலர் மின்விளக்குகளை அணைத்துவிட்டு தம்மைத் தாக்கியதாக தமிழ் மாணவர் இருவர் பீடாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

---

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுள்ளது)

உட்துறைக் கணக்காய்வாளர்

## பதவி வெற்றிடம்

மேற்காட்டிய பதவிக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணபப்பம் கோரப்படுகின்றது

தகைமைகள்

(அ) கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்டத்தில் கணக்குப்பதிவாளர் அல்லது கணக்கு அல்லது கணக்காய்வுலிகிதர் பதவியில் 02 வருடத்திற்குக்குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 11 -வது சம்பளத்திட்டத்தில் கணக்கியல் சம்பந்தமான துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

(ஆ) ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையில் சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில் கணக்கியல்சம்பந்தமான துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரத் (உயர் தரம்) / க பொ. த (உயர் தரம்) தில் கணக்கியலை ஒரு பாடமாகக்கொண்ட மூன்று பாடங்களிலான சித்தியும், அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல் துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவமும்.

வயதெல்லை:- 21-40 வரை கூட்டுறவுச் சங்கத்தில் வேலை செய்தோருக்கு வயதெல்லை கணிக்கப்படமாட்டாது.

சம்பளம்:- குறி எண்: 105/09
1205 - 40 X 5 - 50 X 10 - 1905 இத்துடன் கூ. ஆ குழுச் சுற்றுநிருபத்திற்கு அமையச் சகல படிகளும் வழங்கப்படும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 31-10-92 அன்று அல்லது அதற்குமுன்புகிடைக்கக்கூடியதாக "தலைவர் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை" என்ற விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல் வேண்டும்.

தலைவர்
சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

17-10-92.

(சி- 5255)

---

சென்ற 21-09-1992 திங்கட்கிழமை இறைவனடி எய்திய எமது குடும்பத்தலைவி செல்லையா தங்கம்மா (மண்கும்பான் மேற்கு) அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 20-10-92 செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றியிலும், வீட்டுக்கிருத்தியம் 21-10-92 புதன்கிழமை பகல் 12 00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சமுகமளித்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

செல்லையா சிவபாதலிங்கம்
191H, 218H, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்
பிள்ளைகள்
(மண்கும்பான்)

[3493]

---

## மரண அறிவித்தல்

## சின்னையா தையலம்மை

கொட்டடியைப் பிறப்பிடமாகக்கொண்ட சின்னையா தையலம்மை 19-10-92 (நேற்று) மாலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற சின்னையாவின் அன்பு மனைவியும், நடராசா, சிவபாக்கியம், மகேஸ்வரி, ஜெகதீஸ்வரன், சிறிறங்கலட்சுமி, பரமசிவம், இரத்தினேஸ்வரன், ஆகியோரின் அன்புத்தாயாரும் பரமசாமி, லலிதாதேவி, சோமசுந்தரம், அருளம்பலம், மங்களராணி, புஸ்பராணி, தனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற சண்முகம், காலஞ்சென்ற சின்னத்துரை ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் 20-10-92 (இன்று) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்

சி. ஜெகதீஸ்வரன்
(மகன்)
ஆ. சி. பரமசாமி
(மருமகன்)

28/2, ஆஸ்பத்திரி வீதி,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

(3492)

---

## உள்வந்த வெளிச் சென்ற வாகன இலக்கங்கள்

## 19-10-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்; 6181

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

71-4984, 22-6832, 41-1462, 42-6119, 24-5036, 41-1665, 24-5734, 26-6461, 24-9674, 24-6480, 28-1928, 28-6624, 24-2545, 24-6475, 26-1724, 28-1677, 24-192, 26-1495, 27-1187, 27-9756, 24-6811, 41-7109, 24-5939, 40-2677, 41-9175, 41-9396, 24-4350, 26-1019, 26-1728, 26-5493, 41-9211.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

41-5178, 42-2995, 24-4747, 40-7207, 22-3887, 28-0940, 26-6568, 24-7360, 24-5015, 24-5529, 26-0382.

---

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.